# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2293/33 - 2022 අගෝස්තු මස 17 වැනි බදාදා - 2022.08.17

*2293/33 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 6-2017* (i)

***2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபைச் சட்டம்***

*9 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால த சில்வா ஆகிய நான் 2016, யூலை 01 ஆந் திகதிய 1973/78 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையை பின்வருமாறு இக்கட்டளையால் திருத்துகின்றேன்.*

(1) "இரண்டாவது அட்டவணையின் வானூர்தித் தளங்களின் கீழ் பட்டியல்படுத்தப்பட்டுள்ள மட்டக்களப்பு விமான நிலையத்தை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபைக்கு உடனடியாக நடைமுறையிலுள்ளவாறு உரிமை மாற்றம் செய்யப்பட்டு உடைமை வழங்கப்படுமென இத்தால் அறியத்தருகின்றேன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "உடனடியாக பயனுறும்வகையில் சொல்லப்பட்ட சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட மட்டக்களப்பு விமான நிலையத்தை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபைக்கு கைமாற்றி உரித்தாக்குகின்றேன் என இத்தால் அறியத்தருகின்றேன்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) "இத்தால் அறியத்தருகின்றேன்" என்னும் சொல்லப்பட்ட சொற்களை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்.


1A - PG 5931 — 156 (2022/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் 181டி- செட்டிக்குடா கிராம அலுவலர் பிரிவினுள் அமைந்துள்ளதும் நில அளவை வரைபட இல. பூவ/மட/2972 இல் காணித்துண்டம் 1 இனால் குறித்துக் காட்டப்படும் விஸ்தீரணத்தில் 77,7301 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ள பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட காணித்துண்டு அடங்கலும் அத்துடன் சொல்லப்பட்ட வரைபடத்தின்படி சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 எல்லையிடப்படுகின்றது.*

*வடக்கு: பாதைவேலி, வரைபட இல. பூ. வ. மட 836 இனைக் கொண்ட காணித்துண்டம் இல. 1, ரிபி 253659, ரிபி 177256 மற்றும் வரைபட இல. பூ. வ மட 2604 இனைக் கொண்ட காணித்துண்டம் இல. 3;*

*கிழக்கு: வரைபட இல. பூ. வ மட 2604 இனைக் கொண்ட காணித்துண்டம் இல. 3, 4 மற்றும் 2;*

*தெற்கு: வரைபட இல. பூ. வ மட 2604 இனைக் கொண்ட காணித்துண்டம் இல. 2 மற்றும் 1; அத்துடன்*

*மேற்கு: வரைபட இல. பூ. வ மட 2604 இனைக் கொண்ட காணித்துண்டம் இல. 1, பாதை வேலி, வரைபட இல. பூ. வ. மட 836 இனைக் கொண்ட காணித்துண்டம் இல. 1, ரிபி 253659 மற்றும் ரிபி 177256.*

***நிமல் சிறிபால த சில்வா,***
*துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும்*
*விமானசேவைகள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2022, ஓகத்து 08.*

EOG *08-0151*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*